# சமூக ஊடகத்துடன் தொடங்குதல்

**சமூக ஊடகச் செயற்தளங்கள் (முகநூல், டிக் டாக் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்றவை) குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் செய்திகள், படங்கள் ஏன் காணொளிகளுடன் வாயிலாகவும் இணைந்திருக்க சிறந்த வழியாகும்.**

ஆனால் இதில் தீங்கான உள்ளடக்கத்தைப் பார்ப்பது, மோசமாக நடத்தப்படுவது அல்லது முறையற்ற செய்திகளை அனுப்புவது போன்ற அபாயங்களும் உள்ளன.

## கேட்கவேண்டிய மூன்று கேள்விகள்

பெரும்பாலான செயற்தளங்கள் அதில் இணைவதற்கான குறைந்தபட்ச வயதை 13 ஆக வைத்துள்ளன. ஆனால் ஒரு குழந்தையும் அபாயங்களைக் கையாளக்கூடியவர்களாக இருக்கவும் வேண்டியுள்ளது. உங்கள் குழந்தையிடம் கேட்கவேண்டிய மூன்று கேள்விகள்:

- இணையத்தில் தீங்கான ஒன்றைப் பார்த்தால் நீ என்ன செய்வாய்?
- இணையத்தில் உள்ள செய்தி அல்லது நபர் பாதுகாப்பானவர் என்று எப்படிச் சொல்கிறாய்?
- உனக்கு இணையத்தில் மோசமானது ஏதும் நடந்தால் நீ யாரிடம் செல்வாய்?

## உங்கள் குழந்தைக்கு உதவுங்கள்

eSafety வழிகாட்டி என்ற eSafety இணையதளம் உங்கள் குழந்தையின் கணக்கை பத்திரமாக வைத்திருக்க உதவும்.
உங்கள் குழந்தை சமூக ஊடகத்தைப் பயன்படுத்தும்போது அவர்களை மேல்பார்வை செய்வதும் நல்ல யோசனை தான். ஏனெனில் மூத்தவர்கள் ஆர்வம் காட்டவும் அருகிலும் இருக்கும்போது குழந்தைகள் உதவி கேட்க அதிக வாய்ப்புள்ளது.

## சமூக ஊடகத்தைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துதல்

உங்கள் குழந்தையிடம் அவர்கள் கணக்கை எப்படிப் பயன்படுத்த விரும்புகிறார்கள் என்பது குறித்துப் பேசுங்கள். நீங்கள் ஊக்குவிக்க வேண்டியவை:

- அன்பானவர்களாகவும் மற்றவர்களிடம் மரியாதையாகவும் நடந்துகொள்வது
- அவர்களை ஒருவர் எளிதில் அடையாளம் காணத்தக்க விபரங்களைப் பகிர்வதைத் தவிர்த்தல் (அவர்கள் பள்ளிச் சீருடை அல்லது வீட்டு முகவரி போன்றவை)
- சமூக ஊடகத்தில் அவர்கள் எவ்வளவு நேரம் செலவிடுகிறார்கள் என்பதைக் கட்டுப்படுத்துவதற்கு செயலி அம்சங்களைப் பயன்படுத்துங்கள்
- eSafety தகவல்களைப் பயன்படுத்தி இணையத்தில் இளையோர் பாதுகாப்பாக இருப்பது குறித்து மேலும் அறிந்துகொள்ளுங்கள்.

## சமூக ஊடகத்தில் பிரச்சினைகளைக் கையாளுதல்

இணையத்தில் ஒருவர் மீது அழுத்தத்தை ஏற்படுத்துவது, அடாவடி அல்லது துன்புறுத்தல் செய்வது ஒருபோதும் சரியானதல்ல. eSafety வழிகாட்டியைப் பயன்படுத்தி சமூக ஊடகச் செயற்தளத்துக்கு எந்தவொரு பிரச்சினைகளையும் எவ்வாறு புகாரளிப்பது எனத் தெரிந்துகொள்ளுங்கள். செயற்தளம் உதவவில்லை எனில், சரியான உதவியைப் பெற உதவுவதற்கு eSafety-யைத் தொடர்புகொள்ளுங்கள்.



உங்கள் குடும்பத்தை இணையத்தில் பாதுகாப்பாக வைத்திருப்பது குறித்த கூடுதல் தகவல்களுக்கு, எங்கள் இணையதளத்தில் eSafety Parents (இணையப் பாதுகாப்பு பெற்றோர்) என்று தேடுங்கள்.